<u>தேதி - 23.02.2026</u>

<u>அசல் வழக்கு எண்.11/2020</u>

<u>பி.சா.1 – திரு. **V**.தினகரன், த/பெ. வெள்ளைச்சாமி</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1ம் வாதியும், நானும் நண்பர்கள் என்றால் சரிதான். 1994ல் இருந்து நண்பர்கள். வா.சா.ஆ.1 ஐ நான் தான் எழுதிக் கொடுத்தேன், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். ரூ.40,00,000/- கடனை காசோலை மூலமாக கொடுத்தேன். அந்த செல்இரசீது தான் வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.2ல் ரூ.40,00,000/-ஐ காசோலை எண்.104779 மற்றும் 104780 மூலம் தலா ரூ.20,00,000/- என்ற வகையில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன செல் இரசீது தேதியும், வா.சா.ஆ.3, 4 ஆன காசோலைகளின் தேதியும் ஒன்று தான் என்றால் சரிதான். காசோலைகளில் குறிப்பிட்டுள்ள தொகையை 1ம் வாதிக்கு தொகையாக கொடுத்துவிட்டேன். மேற்படி தொகையை கொடுத்ததற்கான இரசீது எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் ரூ.40,00,000/- கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் கண்டிப்பாக இரசீது வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 எனக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். அதைப் பெற்றுக் கொண்டதற்கான இரசீதுகள் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் 7க்கு பதில் எதுவும் நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10ல் உள்ளது எனது கையெழுத்து தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றம் 10 ஆகியவை கலெக்சனுக்காக போடப்பட்டது என்றால் சரிதான், அவைகள் பணம் வங்கிக்கணக்கில் போதவில்லை என்று திருப்பப்பட்டது. அதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பு வா.சா.ஆ.12 மற்றும் 13 ஆகும். நான் அதை வாங்கிக் கொண்டதற்கான ஆவணம் வா.சா.ஆ.14 ஆகும், அதற்கும் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதன்பின்பு NI Act Sec 138படி நடவடிக்கை எடுக்க FTC No.II ல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நான் குற்றவாளியா, இல்லையா என்பது சம்பந்தமான வழக்கு என்றால் சரிதான். கடனை வசூலிப்பதற்கான வழக்கு தான் இந்த வழக்கு என்றால் சரிதான். பிராதில் கோரிய

தொகையும் மற்றும் அதன் பின்வட்டியும் சேர்த்து சட்டப்படி கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மதுரை ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண்.140/2018 வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். பிராதுப்படி அதில் கோரியுள்ள தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பிராதில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.24 10:06:58 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.